# 2011

# වාර්ෂික වාර්තාව සහ ගිණුම් ප්‍රකාශය
# வருடாந்த அறிக்கையும் நிதிக்கூற்றும்
# ANNUAL REPORT & STATEMENT OF ACCOUNTS

## පුනරුත්ථාපන අධිකාරිය
## புனர்வாழ்வு அதிகாரசபை
## REHABILITATION AUTHORITY


අංක. 95, ආනන්ද රාජකරුණා මාවත කොළඹ 10.
இல. 95, ஆனந்த ராஜகருணா மாவத்தை கொழும்பு 10.
No. 95, Ananda Rajakaruna Mawatha, Colombo 10.

# பொருளடக்கம்

*1.* கையளிப்புக் கடிதம்

*2.* வருடாந்த அறிக்கை

*3.* வருடாந்த கணக்குகளின் அறிக்கை

*4.* கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

*5.* கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மீதான
தலைவரின் அவதானிப்பு

## கையளிப்புக் கடிதம்

**கௌரவ. சந்திரசிறி கஜதீர,**
பாராளுமன்ற உறுப்பினர்,
புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்.
**புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு,**
**இல.** 35, ஏ, டாக்டர் என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு – 08.

**கௌரவ அமைச்சர் அவர்களுக்கு,**

1971ஆம் ஆண்டின் 38ம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 29ம் இலக்க ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச்செய்யும் அதிகாரசபையின் 2011ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதியறிக்கையையும், அதிகாரசபையின் ஆண்டறிக்கையையும் கணக்குகளின் கூற்றையும் பணிப்பாளர் சபையின் சார்பில் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் உண்மையுள்ள,

**ஈ.ஏ. சமரசிங்க,**
தலைவர்,
புனர்வாழ்வு அதிகாரசபை.

**ஆட்களையும் ஆதனங்களையும் மற்றும் கைத்தொழில்களையும்**
**புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை. (றெப்பியா),**

இல. 95, ஆனந்த ராஜகருணா மாவத்தை, கொழும்பு- 08.

# ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையின் (றெப்பியா)

## 2011ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை.

1987ம் ஆண்டின் 29ம் இலக்க புனர்வாழ்வு அதிகார சபைச் சட்டத்தின் மூலம் இச்சபை உருவாக்கப்பட்டது.

**2011ம் ஆண்டுக்கான புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை விபரம் வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 1. | **திரு. ஈ.ஏ. சமரசிங்க** | - | தலைவர் |
| 2. | **திரு. டீ.கே. ஜினதாச** | - | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| 3. | **திரு. டி. சிறிதரன்** | - | பணிப்பாளர் |
| 4. | **ஜனாப். ஏ. சமூன் கலீல்** | - | பணிப்பாளர் |
| 5. | **திரு. பி. கிறிவத்துடுவ** | - | பணிப்பாளர் |

பயங்கரவாத நடவடிக்கைகள் இன வன்செயல்கள், அரசியல் வன்முறைகள் என்பவற்றால் பாதிப்புற்ற ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் நோக்கில் பின்வரும் கடமைகளையும் பொறுப்புக்களையும் இச்சபை கொண்டுள்ளது.

### (அ) அரச அதிகார பணிகள் (Statutory Functions)

1) பயங்கரவாத செயற்பாடுகளினால் பாதிப்புற்றவர்களுக்கு நிவாரணம் அளித்தல்.
2) பயங்கரவாதத்தினால் பாதிப்புற்ற வீடுகள் சொத்துக்களின் உரிமையாளர்களுக்கு உதவியளித்தல்
3) பயங்கரவாதத்தினால் பாதிப்புற்ற வீடுகள் சொத்துக்களின் குடியிருப்பாளர்களுக்கு உதவியளித்தல்
4) பாதிப்புற்ற சொத்துக்களை இடித்து அழிப்பதற்கும் அதனால் ஏற்படும் சிதைவுகளை அப்புறப்படுத்துவதற்கும் கட்டளையிடல்.
5) பாதிப்புற்ற தொழில்கள், வியாபார முயற்சிகள் என்பனவற்றை கட்டியெழுப்ப உதவுதல்.
6) பாதிப்புற்ற சொத்துக்களை அரசுடமையாக்குதல்.
7) அங்கனம் அரசுடமையாக்கப்பட்ட சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்களுக்கு அச்சொத்துக்களை மீளக் கையளித்தல்.
8) அரசின் பொறுப்பில் பாரஞ்சாட்டப்பட்ட சொத்துக்களின் உரிமையாளர்கள் அவற்றின் குடியிருப்பாளர்கள் இடையில் உண்டாகும் இது சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.

## (ஆ) ஏனைய பணிகள்

அ. ஒருங்கிணைந்த உதவித்திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றக் கொடுப்பனவை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

ஆ. பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைகள் 49/89 மற்றும் 21/88 என்பவற்றின் பிரகாரமும் புனர்வாழ்வு அமைச்சின் RR/UAS/MAP/01 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமும் அரச / கூட்டுத்தாபன ஊழியர்கள், அதிமுக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு ஏற்படும்,

(i) மரணம்.

(ii) காயம்

(iii) சொத்தழிவுக்கான நட்டஈடு வழங்குதல்.

இ. பாதிப்புற்ற அன்றேல் அழிவுற்ற வணக்கஸ்தலங்களைப் புனர்நிர்மாணம் செய்ய உதவியளித்தல்.

ஈ. திருமண சுபீட்சக் கொடுப்பனவு

உ. தேர்தல் வன்முறையால் பாதிப்புற்றவர்களுக்கு நட்டஈடு வழங்குதல்.

ஊ. புனர்வாழ்வுக் கடன் வழங்குதல்.

எ. சுயதொழில் நிவாரணக் கடன் திட்டம்.

ஏ. வீட்டுக் கடன் திட்டம்.

ஐ. அபிவிருத்தி குன்றிய கிராமங்களில் உள்ள பாபிக்கப்பட்ட மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தல்

## (இ) செயற்பாடுகளின் விபரங்கள்.

### 01. <u>ஒருங்கிணைந்த உதவித்திட்டம்</u>

மீள் குடியேற்ற புனர்வாழ்வு உதவி, பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு "ஒருங்கிணைந்த நிவாரண உதவித்திட்டம்" எனும் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இதனை புனர்வாழ்வு அதிகாரசபையும், இந்த சபைக்குப் பொறுப்பான அமைச்சும் (தற்போது புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு) இணைந்து செயற்படுகின்றன. இத்திட்டம் 1983ம் ஆண்டு அவசர புனர்வாழ்வு, புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, பின்னர் 1994ம் ஆண்டிலும் பாதிக்கப்பட்டோருக்கு கூடுதல் நலன்புரி நோக்கில் திருத்தியமைக்கப்பட்டது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை 22.02.2002ம் தினம் கைச்சாத்திடப்பட்டதற்கு முன்னர் இத்திட்டத்தின் கீழ் ஒரு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு மொத்தமாக ரூபா. 65,000.00 கீழ்வரும் முறைப்படி வழங்கப்பட்டது.

**(அ) மீள்குடியேற்ற உதவித்தொகை (ரூபா. 2,000.00)**

இந்த உதவித்தொகை ஒரு பாதிக்கப்பட்ட குடும்பம் மீளக்குடியேறும் போது வழங்கப்படுகிறது.

**(ஆ) உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு (ரூபா. 5,000.00)**

இந்தத் தொகை பாதிப்புற்ற குடும்பம் மீளக் குடியேறியதன் பின்னர் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்படுகிறது. இத்தொகை ரூபா. 4,000.00 லிருந்து ரூபா. 5,000.00 ஆக 2002ம் வருட மத்தியிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

**(இ) தற்காலிக வீடமைப்பு உதவித் தொகை (ரூபா.7,000.00)**

மீளக்குடியேறும் ஒரு குடும்பம் தற்காலிக குடியிருப்பு கொட்டில் ஒன்றை அமைத்துக்கொள்வதற்கென இத்தொகை வழங்கப்படுகிறது.

**(ஈ) நிரந்தர வீட்டுக்கான உதவித் தொகை (ரூபா.50,000.00)**

மீள் குடியேறிய குடும்பம் நிரந்தர வீடொன்றை அமைத்துக் கொள்வதற்காக இத்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1998ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

**(உ) உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான உதவித் தொகை (ரூபா. 1,000.00)**

மீள் குடியேறிய ஒரு குடும்பம் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இத்தொகை வழங்கப்படுகிறது.

**குறிப்பு 01:** யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னர் மேலே 1 தொடக்கம் 8 வரை குறிப்பிடப்பட்டுள்ள உதவித் தொகைகள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டதுடன் அதன் பெறுமானம் ரூபா.100,000.00 ஆக உயர்த்தப்பட்டு பின்வரும் இரண்டு கூறுகளாக வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நிரந்தர வீடமைப்பு மானியம் | : | ரூபா.75,000.00 |
| வாழ்வாதாரக் கொடுப்பனவு | : | ரூபா.25,000.00 |

**குறிப்பு 02:** யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மீளக் குடியேறிய அன்றேல் மீளக் குடியமர்த்தப்படவுள்ள குடும்பங்கள் இந்த உதவித் தொகையை பெற அருகதை உடையன.

**குறிப்பு 03:** 2010ம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் கீழ் உதவித் தொகையானது இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளது. முதற் கட்டமாக ரூபா.50,000.00 மும் மிகுதி ரூபா.50,000.00 ஆகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 1000 குடும்பங்களுக்கு ரூபா.50,000,000.00 வழங்கப்பட்டுள்ளது.

## 2. புனர்வாழ்வு உதவிகள்

### 2.1 மரணம், காயம் என்பவற்றுக்கான நட்டஈடு வழங்கல்

### (அ) அரச / கூட்டுத்தாபன ஊழியருக்கான நட்டஈடு

➢ *மரணத்திற்கான நட்டஈடு*

அரச / கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு பயங்கரவாத நடவடிக்கைகளினால் மரணம் ஏற்படின், அத்தகைய ஊழியர்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு ரூபா.200,000.00 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

➢ *காயங்களுக்கான நட்டஈடு*

பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமடையும் அரச / கூட்டுத்தாபன ஊழியர்கள் மருத்துவ சான்றிதழின் அடிப்படையில், ஆகக் கூடுதல் தொகையாக ரூபா.100,000.00 நட்டஈடாகப் பெறத் தகுதியுடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 51 நபர்களுக்கு ரூபா.6,295,000.00 வழங்கப்பட்டுள்ளது.

### (ஆ) அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நட்டஈடு

***(i)*** *மரணத்திற்கான நட்டஈடு*

இந்த திட்டத்தின் கீழ் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ராட்சிமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்களில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஆகியோருக்கு பயங்கரவாத செயற்பாடுகளினால் மரணம் சம்பவிக்கும் பட்சத்தில், அவர்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா.500,000.00 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

***(ii)*** *காயங்களுக்கான நட்டஈடு*

மேலே (i) இல் குறிப்பிட்டுள்ள பிரமுகர்கள் பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமுற்றிருப்பின் மருத்துவ சான்றிதழ் ஒன்றின் அடிப்படையில் ஆகக்கூடிய தொகையாக ரூபா. 500,000.00 நட்டஈடாகப் பெறத் தகுதியுடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எந்தவொரு நபர்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

**(இ) கடும் பாதிப்புற்றோருக்கான நட்டஈடு**

*(i) மரணத்திற்கான நட்டஈடு*

இத்திட்டத்தின் கீழ் பயங்கரவாத செயற்பாடுகளினால் மரணமடையும் பொதுமக்களில் தங்கியுள்ளோர் / நெருங்கிய உறவினர்களுக்கு ரூபா. 100,000.00 நட்டஈடாக வழங்கப்படுகிறது.

*(ii) காயங்களுக்கான நட்டஈடு*

பொதுமக்களில் எவரேனும் பயங்கரவாத செயற்பாடுகளினால் காயமடையும் பட்சத்தில் மருத்துவ சான்றிதழின் அடிப்படையில், ஆகக் கூடுதல் தொகையாக ரூபா. 50,000.00 நட்டஈடாகப் பெறத் தகுதியுடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 227 நபர்களுக்கு ரூபா.19,667,500.00 நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

## 2.2 பாதிக்கப்பட்ட / அழிவுற்ற சொத்துக்களுக்கான நட்டஈடு

**(அ) அரச / கூட்டுத்தாபன ஊழியருக்கான நட்டஈடு**

1987 ம் ஆண்டு ஜுலை / ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற இன வன்முறைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற, நடைபெறும் இத்தகை வன்முறைகள் என்பவற்றில் தம் சொத்துக்கள் பாதிப்புற்ற அரச / கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகையாக ரூபா.150,000.00 ஐ பெற உரித்துடையோராவார்.

இந்தத் திட்டத்தின் கீழ் 148 நபர்களுக்ககு ரூபா.17,473,674.00 நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

**(ஆ) அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நட்டஈடு**

மேலே (அ) இல் குறிப்பிட்டுள்ளவாறான வன்முறைகளில் தம் சொத்துக்கள் பாதிப்புற்ற/ அழிவுற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், உள்ளுராட்சிமன்ற உறுப்பினர்கள், மேலும் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி மன்ற தேர்தல்களில் தோல்வியுற்ற அபேட்சகர்கள் ஆகியோர் ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகையாக முறையே ரூபா. 500,000.00 மற்றும் 150,000.00 உச்ச தொகைக்கு அமைவாக பெறத் தகுதியுடையோராவார்.
இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எந்தவொரு நபர்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

**(இ) பொது மக்களுக்கான நட்டஈடு**

மேலே (அ) மற்றும் (ஆ) இரண்டிலும் குறிப்பிடாத பொது மக்களது சொத்துக்கள், வாகனங்கள் பாதிப்புற்றிருப்பின் / அழிவுற்றிருப்பின், அவற்றுக்கான நட்டஈடாக ரூபா. 100,000.00 அன்றேல் அழிவில் 20% கொடுப்பனவு, இதில் எது குறைவானதோ அதைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையோராவார்.

1983ம் ஆண்டு ஜுலைக் கலவரம் மற்றும் அதன்பின்னர் ஏற்பட்ட இழப்புக்களுக்கான நட்டஈடாக இது வழங்க முடியுமானதோடு, இந்நட்டஈட்டுத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருப்பது 1996.02.16 திகதியிலிருந்தாகும்.

இவ்வருடத்தில் 224 நபர்களுக்கு ரூபா.15,402,345.00 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

## 2.3 வணக்கஸ்தலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு/ அழிவுகளுக்கான நட்டஈடு

பயங்கரவாத நடவடிக்கையினால் பாதிப்புற்ற அன்றேல் அழிந்த வணக்கஸ்தலங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவி இச்சபையினால் வழங்கப்படுகிறது. முற்றாக அழிந்து போன வணக்கஸ்தலங்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா.1,000,000.00 உம் மற்றும் பகுதி சேதமுற்ற வணக்கஸ்தலங்களுக்கு ஆகக் கூடிய தொகையாக ரூபா.500,000.00 உம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பு வருடத்தில் 01 வணக்கஸ்தலத்துக்கு ரூபா.1,000,000.00 வழங்கப்பட்டது.

## 03 திருமண சுபிட்சக் கொடுப்பனவு

பயங்கரவாத வன்செயல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வன்செயல்களின் காரணமாக அரச நலன்புரி நிலையங்களில் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் வாழ்ந்து அல்லது வாழ்ந்திருந்த போது திருமணமான ஒரு நபருக்கு ரூபா. 12,500.00 நிவாரணமாக பெற உரித்துடையவராவர்.

குறைந்த மட்டத்தில் வருமானம் பெறும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக இத்திட்டத்தின் கீழ் நிவாரணமானது வழங்கப்படுகின்றது. திருமணமான இருவரும் அரசினால் நடாத்தப்படும் நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களாயின் ரூபா. 25,000.00 கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். இந்நிவாரணத்திட்டம் 1995 ம் ஆண்டு ஜுலை மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் எந்தவொரு நபர்களுக்கும் நட்டஈடு வழங்கப்படவில்லை.

## 04 அரசியல் வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்காக நட்டஈடு வழங்கல்

31.12.1997 ம் ஆண்டு எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேர்தல் வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கும் இத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் முறையால் நட்டஈடு வழங்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| அபேட்சர்கள் : | சொத்தழிவு ஆகக் கூடிய தொகை | ரூபா. **500,000.00** |
| | மரணம் ஆகக் கூடிய தொகை | ரூபா. **500.000.00** |
| | காயம் ஆகக் கூடிய தொகை | ரூபா. **150.000.00** |
| | **(மருத்துவ சான்றிதழின் பிரகாரம்)** | |
| தேர்தல் முகவர்கள் : | சொத்தழிவு ஆகக் கூடிய தொகை | ரூபா. **50,000.00** |
| | மரணம் ஆகக் கூடிய தொகை | ரூபா. **100.000.00** |
| | காயம் ஆகக் கூடிய தொகை | ரூபா. **75.000.00** |
| | **(மருத்துவ சான்றிதழின் பிரகாரம்)** | |

| | | | |
|---|---|---|---|
| பொது மக்கள் : | சொத்தழிவு ஆகக் கூடிய தொகை | ரூபா. | **50,000.00** |
| | மரணம் ஆகக் கூடிய தொகை | ரூபா. | **50.000.00** |
| | காயம் ஆகக் கூடிய தொகை | ரூபா. | **50.000.00** |
| | **(மருத்துவ சான்றிதழின் பிரகாரம்)** | | |

இத்திட்டத்தின் கீழ் நட்டஈடு வழங்க முன்னர் சகல விபரங்களும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு சிபார்சு கிடைக்கப் பெறல் வேண்டும். அதன் பிரகாரம் 1776 விண்ணப்பதாரர்களுக்காக நட்டஈடு வழங்க அமைச்சரவையன் அனுமதி கோரப்பட்டுள்ளது.

## 05. புனர்வாழ்வு கடன் வழங்கல்

### *(I)* <u>கைத்தொழில் கடன்</u>

9% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் ஆகக் கூடிய தொகையாக ரூபா. 5,000,000.00 இத்திட்டத்தின் கீழ் அழிவுற்ற ஒரு கைத்தொழிலை மீளக் கட்டியெழுப்புவதற்காக வழங்கப்படுகிறது. இலங்கை வங்கியே கொடுப்பனவு, மீள் வசூலிப்பு என்பவற்றிற்கான பொறுப்பையும் வகிக்கிறது.

இத் திட்டத்தின் கீழ் 02 நபர்களுக்கு ரூபா.10,000,000.00 நடப்பாண்டில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

### *(II)* <u>சுயதொழில் கடன்திட்டம்</u>

இப்புதிய கடன் திட்டத்திற்கு 2010ம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனானது பயங்கரவாத வன்செயல் காரணமாக கணவனை இழந்த விதவைகள் மற்றும் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு 4% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் ஆகக் கூடிய தொகையாக ரூபா. 250,000.00 வழங்கப்படுகின்றது.

குறிப்பாக இக்கடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே வழங்ப்பட்டு வருகின்றன, அந்த அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் மொத்தமாக 2116 பயனாளிகளுக்கு ரூபா.318,095,000.00 வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் வருமாறு.

| மாவட்டம் | வழங்கப்பட்ட எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 991 | 144,540,000.00 |
| வவுனியா | 147 | 19,520,000.00 |
| கிளிநொச்சி | 775 | 122,235,000.00 |
| முல்லைத்தீவு | 38 | 6,725,000.00 |
| மன்னார் | 89 | 14,690,000.00 |
| மட்டக்களப்பு | 35 | 4,090,000.00 |
| திருகோணமலை | 41 | 6,295,000.00 |
| **மொத்தம்** | **2116** | **318,095,000.00** |

*(111)* **வீட்டுத்திட்டக் கடன்**

2010ம் ஆண்டில் இக்கடன் திட்டத்திற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனானது பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட விதவைகள் மற்றும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 4% வட்டியில் 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் ஆகக் கூடிய தொகையாக ரூபா. 250,000.00 வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 184 பயனாளிகளுக்கு ரூபா.36,800,000.00 வழங்கப்பட்டுள்ளது.

*(IV)* **கல்விச் சகாய நிதி வழங்குதல்**

பயங்கரவாத வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட அநாதைச் சிறுவர்களின் கல்வி நடவடிக்கையை மேம்படுத்துவதற்காக கல்விச் சகாய நிதித் திட்டம் ஒன்றும் செயற்படுத்தப்பட்டது. ஒரு மாணவருக்கு ரூபா.5000.00 வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 37 மாணவர்களுக்கு ரூபா.185,000.00 வழங்கப்பட்டுள்ளது.

*(V)* **புனரமைக்கப்பட்ட சூழல் நட்புறவுக் கிராமம் அமைத்தல்**

கௌரவ புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருடைய புத்தம் புதிய எண்ணக்கருக்கலிள் ஒன்றாக மேற்படி கிராமங்கள் புனரமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் ஏனைய அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களின் உதவிகளுடன் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்கின்றன. குறித்த இக்கிராமத்தின் முக்கிய தேவையான வீட்டு வசதிகள், கோவில் புனரமைப்பு, மற்றும் சுயதொழில் போன்றவற்றை அதிகாரசபை வழங்கி வருகின்றன. அதற்கான விபரங்கள் வருமாறு.

இந்த அடிப்படையில் நடப்பாண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில், பூநகரி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள "பள்ளிக்குடா" கிராமம் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு புனர்வாழ்வு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விபரங்கள் வருமாறு.

| வேலைத் திட்டங்கள் | செலவுத் தொகை |
|---|---|
| பள்ளிக்குடா குளம் | 2,300,000.00 |
| சேவா பியச | 1,000,000.00 |
| விருமர் கோவில் புனரமைப்பு | 1,000,000.00 |
| வீட்டு மானியம் | 5,600,000.00 |
| சுயதொழில் கடன் | 10,000,000.00 |
| வீட்டுக் கடன் | 7,500,000.00 |
| கடற்றொழில் கடன் | 33,500,000.00 |

**ஈ.ஏ. சமரசிங்க,**
தலைவர்,
புனர்வாழ்வு அதிகாரசபை.

**புனர்வாழ்வு அதிகார சபை (றெப்பியா),**

இல.95, ஆனந்த ராஜகருணா மாவத்தை,

கொழும்பு- 10.

**ஆட்களையும், ஆதனங்களைம் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை**
**(1987ம் ஆண்டின் 29ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்டது)**

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலவரம் தொடர்பான அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | **1,300,157,110.25** | **1,250,667,839.01** |
| அசையாத சொத்துக்கள் | 13 | 197,411,082.73 | 141,292,694.06 |
| நீண்ட கால முதலீடுகள் | 14 | 882,089,770.13 | 888,354,327.63 |
| அறவிடக் கூடிய கடன்கள் | 15 | 73,647,007.21 | 73,801,637.21 |
| திறைசேரி இருப்புக்கள் | | 73,920,691.06 | 73,920,691.06 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 16 | 73,088,559.12 | 73,298,489.05 |
| **பொறுப்புக்கள்** | | **1,300,157,110.25** | **1,250,667,839.01** |
| திரண்ட நிதி | | 334,299,336.92 | 332,753,416.23 |
| வருடத்தின் தேறிய நிதி மீதி (பற்றாக்குறை) | | 4,217,334.80 | 2,137,984.71 |
| வருட இறுதியில் திரண்ட நிதி | | 338,516,671.72 | 334,981,400.94 |
| மீள் மதீப்பீட்டு மீதி | | 5,738,374.50 | 5,738,374.50 |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | | 117,296,000.00 | 130,496,000.00 |
| சேமநல ஒதுக்கீடு | | 4,832,555.00 | 4,327,557.50 |
| அசையாப் பொறுப்புக்கள் | 17 | 765,396,770.00 | 765,397,567.00 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 18 | 8,376,739.03 | 9,816,939.07 |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கியமான ஒரு அம்சமாகும் அடைப்புக் குறிப்புக்கள் உள்ள தொகைகள் கழித்ததாகக் காட்டப்படல் வேண்டும்.

**ஈ.ஏ.சமரசிங்க**
தலைவர்

**ஆர்.எம்.என்.கே.கே.அபேரத்ன**
பிரதிப் பணிப்பாளர் (நிதி)

**ஏ.திஸாநாயக்க**
செயலாளர்,
புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு.

## ஆட்களையும், ஆதனங்களைம் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை

### 2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|---|
| **வருமானம்** | | **110,235,080.17** | **146,206,263.11** |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி | 01 | 94,200,000.00 | 130,484,000.00 |
| வட்டி | 02 | 13,565,806.02 | 14,865,735.11 |
| சொத்துக்களின் விற்பனை இலாபம் | | 2,434,394.15 | 21,550.00 |
| நானாவித வருமானம் | | 34,880.00 | 834,978.00 |
| **செலவினங்கள்** | | **106,017,745.37** | **144,068,278.40** |
| பொது நிர்வாக செலவினங்கள் | | 45,959,226.37 | 41,413,100.40 |
| தனிப்பட்ட ஊதியம் | 03 | 23,471,067.44 | 24,040,510.12 |
| பிரயாணம் | 04 | 290,868.50 | 189,252.00 |
| விநியோகம் - பாவனைப் பொருள் | 05 | 2,771,852.59 | 2,257,929.81 |
| நிலையான சொத்துப் பராமரிப்பு | 06 | 2,808,936.79 | 2,746,712.66 |
| ஒப்பந்த சேவைகள் | 07 | 10,345,502.54 | 7,756,399.78 |
| ஏனைய மீண்டும் வரும் செலவினங்கள் | 08 | 5,292,875.61 | 1,540,855.76 |
| பெறுமானத் தேய்வு | 09 | 978,122.90 | 2,881,440.27 |
| **செயற்பாட்டு நடவடிக்கை** | | **60,058,519.00** | **102,655,178.00** |
| கடும் பாதிப்புற்றோருக்கான நட்டஈடு | 10 | 25,997,500.00 | 34,720,170.00 |
| சொத்திழப்பு நட்டஈடுகள்<br>61,947,249 | 11 | 33,876,019.00 | |
| ஏனைய சேமநலன்கள்<br>5,987,759.00 | 12 | 185,000.00 | |
| **வருமானத்தை விஞ்சிய செலவினம்** | | **4,217,334.80** | **2,137,984.71** |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கிய ஒரு அம்சமாகும் அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழித்ததாகக் காட்டப்படல் வேண்டும்.

## ஆட்களையும், ஆதனங்களைம் மற்றும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபை

### 2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று அறிக்கை

| விபரங்கள் | குறிப்பு | 2011 (ரூபா) |
|---|---|---|
| **செயற்பாடுகளின் நிதிக்கூற்று** | | |
| தேறிய மேலதிக மீதி /(பற்றாக்குறை) | A | **4,217,334.80** |
| அசையாத காசு மீதி | | |
| கூட்டல் - பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கம் | | 978,122.90 |
| சேமநிதிக்கான ஒதுக்கம் | | 504,997.50 |
| கழித்தல் - ஏனைய வேறுபாடுகள் | B | (15,665,711.79) |
| **முன்யை தேறிய மீதி (பற்றாக்குறை)** | | **(9,965,256.59)** |
| நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பு | C | (750,290.72) |
| நடைமுறை சொத்துக்கள் குறைவடைதல் | D | (1,440,200.04) |
| **செய்முறை நடவடிக்கைகளின் நிதிப்பாய்ச்சல்** | | **(12,155,747.35)** |
| **முதலீடுகளின் நிதிப்பாய்ச்சல்** | | **(38,392,859.00)** |
| கடன் மீளப்பெறல் | E | (2,674,432.83) |
| முதலீடுகள் | F | 6,264,557.50 |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் | G | (57,107,507.17) |
| முதலீடுகளின் வருமானம் | H | 15,124,523.50 |
| **மூலதன நடவடிக்கைகளின் நிதிப்பாய்ச்சல்** | | **46,800,000.00** |
| திறைசேரிக்கு வழங்கிய நிதி | | |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதி | | 46,800,000.00 |
| **நிதி மற்றும் நிதிக்கு சமமான - தேறிய அதிகரிப்பு / குறைவடைதல்** | | **(3,748,606.35)** |
| **காலகட்ட ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமான** | I | **14,528,246.81** |
| **காலகட்ட இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமான து** | J | **10,779,640.46** |

கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கிய ஒரு அம்சமாகும் அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழித்ததாகக் காட்டப்படல் வேண்டும்.

**2011.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமைகள் மற்றும் வேறுபாடு தொடர்பான அறிக்கை**

| | ஒருங்கிணைந்த நிதியம் | சேமகால ஒதுக்கீடு | மீள்மதிப்பீட்டு வருமானம் | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 2011.01.01 திகதியின் மீதி | 334,891,400.94 | 4,327,557.50 | 5,738,374.50 | 344,957,332.94 |
| வருடத்திற்குரிய ஒதுக்கம் (தேறிய) | - | 504,997.50 | - | 504,997.50 |
| முன்னைய வருட செலவினம் | (1,307,813.02) | - | - | (1,307,813.02) |
| முன்னைய வருட வருமானம் | 715,749.00 | - | - | 715,749.00 |
| 2011ம் வருட தேறிய சேமிப்பு | 4,217,334.80 | - | - | 4,217,334.80 |
| **2011.12.31ம் திகதியின் மீதி** | **338,516,671.72** | **4,832,555.00** | **5,738,374.50** | **349,087,601.22** |

நிதி அறிக்கைக்கான குறிப்பு

| | விபரங்கள் | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|---|
| 01. | **திறைசேரி வைப்பு** | **94,200,000.00** | **130,484,000.00** |
| | திறைசேரி கட்டுநிதி | 94,200,000.00 | 130,484,000.00 |
| 02 | வட்டி | 13,565,806.02 | 14,865,735.11 |
| | ரூபா 200,000.00 இலங்கை வங்கிக் கடனுக்கான வட்டி | 115,061.65 | |
| | கடன் வழங்கும் நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வட்டி | | |
| | இலங்கை வங்கி | 3,578,602.71 | 5,933,623.28 |
| | மக்கள் வங்கி | 3,880,500.00 | 4,152,760.27 |
| | வீட்டு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 430,139.49 | 453,153.00 |
| | ஹற்றன் நெஷனல் வங்கி | 120,000.00 | 152,396.73 |
| | அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 200,000.00 | 827,397.27 |
| | தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 1,920,000.00 | 1,920,000.00 |
| | புதிய கடன் திட்டம் - இலங்கை வங்கி | 2,223,876.65 | 186,575.33 |
| | சேமநல முதலீட்டுக்கான வட்டி | 359,848.66 | 587,091.87 |
| ஊழியர் கடனுக்கான வட்டி | | | |
| சொத்துக்கள் கடன் | | 448,980.59 | 380,867.27 |
| நிவாரணக் கடன் | | 277,868.47 | 269,079.37 |
| விஷேட முற்பணம் | | 1,927.80 | 2,790.72 |
| 03. | தனிப்பட்ட ஊதியம் | 23,471,067.44 | 24,040,510.12 |
| | அலுவலர்களின் ஊதியம் | 12,622,113.47 | 13,794,065.24 |
| | ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவு | 2,010,286.45 | 1,546,902.91 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு | 502,571.36 | 386,725.72 |
| | ஓய்வூதியப் பங்களிப்பு | 145,058.95 | - |
| | மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு | 976,979.47 | 1,574,402.34 |
| | வாழ்வாதாரக் கொடுப்பனவு | 3,992,362.50 | 4,074,885.89 |
| | தலைவருக்கான படிகள் | 520,000.00 | 323,677.42 |
| | செயற்பாட்டுப் பணிப்பாளருக்கான படிகள் | 240,000.00 | 206,000.00 |
| | பணிப்பாளர் சபைக்கான படிகள் | 77,000.00 | 16,000.00 |
| | பணிப்பாளர் சபையின் செலளாருக்கான படிகள் | 48,000.00 | 48,000.00 |
| | அனுமதித்தல் தொடர்பான கொடுப்பனவுகள் | 145,058.95 | 216,690.64 |
| | விசேட கொடுப்பனவுகள் | 620,139.49 | |
| | வேறு கொடுப்பனவுகள் | 754,080.50 | 1,161,814.35 |
| | மொழித்திறன் கொடுப்பனவுகள் | 88,431.30 | 104,278.11 |
| | சேமநல செலவினம் | 728,985.00 | 587,067.50 |

| | | | |
|---|---|---|---|
| 04. | பிரயாணச் செலவினம் | 290,868.50 | 189,252.00 |
| | பிரயாணச் செலவினம் - உள்ளூர் | 290,868.50 | 189,252.00 |
| 05. | விநியோகம் மற்றும் பாவனை உபகரணம் | 2,771,852.59 | 2,257,929.81 |
| | காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 818,611.88 | 555,967.49 |
| | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 1,778,240.71 | 1,552,957.32 |
| | சீருடைகள் | 65,380.00 | 51,700.00 |
| | புதினத் தாள் மற்றும் சஞ்சிகைகள் | 109,620.00 | 97,305.00 |
| 06 | நிலையான சொத்துக்களின் பராமரிப்பு | 2,808,936.79 | 2,746,712.66 |
| | நிலையான சொத்துக்களின் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு | 280,094.45 | 776,341.93 |
| | வாகனங்களை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு | 2,528,842.34 | 1,970,370.73 |
| 07. | ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள் | 10,345,502.54 | 7,756,399.78 |
| | தொலைபேசிக் கட்டணம் | 551,378.51 | 526,799.38 |
| | தபால் கட்டணம் | 305,754.00 | 207,945.00 |
| | மின்சாரம் மற்றும் ஏனைய வசதிகள் | 972,014.40 | 1,028,731.90 |
| | வாடகை | 5,025,000.00 | 3,600,000.00 |
| | வாகனங்களுக்கான வாடகை | 1,167,741.00 | 1,077,349.07 |
| | அச்சகக்கட்டணம் | 1,106,155.63 | 606,928.20 |
| | விருந்தோம்பல் | 1,047,459.00 | 558,646.23 |
| | கணக்காய்வுக் கட்டணம் | 150,000.00 | 150,000.00 |
| | வரிகளுக்கான வட்டி | 20,000.00 | - |
| 08. | ஏனைய மீண்டும் வரும் செலவினங்கள் | 5,292,875.61 | 1,540,855.76 |
| | கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் | 150,000.00 | 24,050.00 |
| | ஊழியருக்கான வைத்திய காப்புறுதிக் கட்டணம் | 409,230.32 | 134,643.64 |
| | நானாவித செலவினம் | 4,306,538.79 | 838,089.02 |
| | நலன்புரிச் சங்கம் | 117,977.00 | 24,847.00 |
| | நடமாடும் சேவை | - | 96,268.00 |
| | நீதிச் செலவு | 114,500.00 | 69,500.00 |
| | வட்டி – தேசிய அபிவிருத்தி வங்கி | 194,629.50 | 353,458.10 |
| 09. | பெறுமானத் தேய்வு – வருட ஆரம்பம் | 978,122.90 | 2,881,440.27 |
| | பெறுமானத் தேய்வு – மோட்டார் வாகனம் | 32,047.43 | 1,677,142.50 |
| | பெறுமானத் தேய்வு – தளபாடம் அலுவலக உபகரணங்களை பொருத்துதல் | 317,468.14 | 343,261.13 |
| | பெறுமானத் தேய்வு – அறைகளாகப் பிரித்தல் | 152,266.00 | 152,266.00 |
| | பெறுமானத் தேய்வு – தொலைபேசி | 42,670.40 | 68,182.82 |
| | பெறுமானத் தேய்வு – இயந்திரம் | 175,262.43 | 100,355.05 |
| | பெறுமானத் தேய்வு – கணனிகள் | 258,408.50 | 268,758.70 |
| | பெறுமானத் தேய்வு – குளிரூட்டிகள் | - | 271,474.07 |

| | | | |
|---|---|---|---|
| 10. | கடும் பாதிப்புற்றோருக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு | 25,997,500.00 | 34,720,170.00 |
| | அரச ஊழியர் | 6,195,000.00 | 2,345,000.00 |
| | பொது மக்கள் | 19,802,500.00 | 32,375,170.00 |
| 11. | பாதிப்படைந்த சொத்துக்களுக்கான நட்டஈட்டுக் | | |
| | கொடுப்பனவு | 33,876,019.00 | 61,947,249.00 |
| | அரச ஊழியர் | 17,473,674.00 | 39,145,571.00 |
| | பொது மக்கள் | 15,402,345.00 | 21,338,438.00 |
| | வணக்கஸ்தலங்கள் | 1,000,000.00 | 665,740.00 |
| | தேர்தல் வன்செயல் காரணமாக பாதிப்புற்றோர் | | 200,000.00 |
| | விஷேட தரத்தினர் | - | 597,500.00 |
| 12. | ஏனைய நலன்புரி நடவடிக்கைகள் | 185,000.00 | 5,987,759.00 |
| | பாடசாலை மாணவர்களுக்கான கொடுப்பனவு | 185,000.00 | - |
| 13. | அசையாத சொத்துக்கள் | 197,411,082.73 | 141,292,694.06 |
| | கிரயம் | | |
| | வருட ஆரம்ப மதீப்பீடு | 20,390,439.18 | 19,837,346.18 |
| | வருடத்தினுள் சேர்க்கப்பட்டவை | 7,107,507.17 | 846,093.00 |
| | வருடத்தினுள் நீக்கப்பட்டவை | 2,308,393.50 | 293,000.00 |
| | சொத்தின் பெறுமதி | | |
| | வருட இறுதி மதீப்பீடு | 25,189,552,85 | 20,390,439.18 |
| | பெறுமானத் தேய்வு | | |
| | கூட்டல் - வருடத்தின் பெறுமானத் தேய்வு | 16,650,830.12 | 14,072,389.85 |
| | கழித்தல் - வருடத்தின் மாற்றீடு | 978,122.90 | 2,881,440.27 |
| | வருட இறுதி மதீப்பீடு | 2,287,397.90 | 293,000.00 |
| | | 15,341,555.12 | 16,660,830.12 |
| | தேறிய புத்தக மதீப்பீடு | 9,847,997.73 | 3,729,609.06 |
| | வருட இறுதி மதீப்பீடு | | |
| | (இல. 1 – 12 பார்க்கவும்) | | |
| | வீட்டு நிவாரணத்திற்கான மூலதன அன்பளிப்பு | 187,563,085.00 | 137,563,085.00 |
| 14. | நீண்ட கால முதலீடுகள் | 882,089,770.13 | 888,354,327.63 |
| | ஒன்றிணைந்த நிவாரணத் திட்டத்தின் கீழ் | | |
| | கடன் வழங்கும் நிறுவனங்களினால் கிடைக்கப்பட்ட | | |
| | நிதி (இணைப்பு 13 – 1) | 877,762,212.63 | 884,410,212.63 |
| | சேமநல முதலீடு | 4,327,557.50 | 3,944,115.00 |

| | | | |
|---|---|---|---|
| 15. | .கடன் மீளப் பெறல் | 73,647,007.21 | 73,801,637.21 |
| | ரூபா 200,000.00 இலங்கை வங்கியின் வியாபாரக்கடன் | 4,681,213.68 | 4,835,843.68 |
| | ரூபா 25,000.00 இலங்கை வங்கியின் சொத்துக்கடன் | 67,341,609.58 | 67,341,609.58 |
| | கடனுக்கான ஒதுக்கம் | (6,736,352.14) | (6,736,352.14) |
| | ரூபா 10,000.00 இலங்கை வங்கியின் சுயதொழிலுக்கான கடன் | 9,289,484.54 | 9,289,484.54 |
| | கடனுக்கான ஒதுக்கம் | (928,948.45) | (928,948.45) |
| 16. | நடமாடும் சொத்துக்கள் | 73,088,559.12 | 73,298,489.05 |
| | சொத்துக்கடன் | 10,708,028.00 | 7,707,461.82 |
| | ஊழியர் கடன் | 6,162,549.39 | 6,632,208.74 |
| | அனர்த்தக் கடன் | 286,864.82 | - |
| | பண்டிகைக் கால முற்பணம் | 93,300.00 | 93,300.00 |
| | கடன் வழங்கும் நிறுவனங்களில் கிடைக்கப் பெற்ற வட்டி | 43,062,118.85 | 42,393,509.14 |
| | சேமலாப முதலீடுகளிலிருந்து கிடைக்க வேண்டிய வட்டி | 515,652.51 | 493,549.60 |
| | கிடைக்க வேண்டிய அறவீடுகள் | 182,330.03 | 101,253.43 |
| | முன்னையக் கொடுப்பனவுகள் | 91,748.82 | 207,107.55 |
| | இருப்பு (காகிதாகிகள்) | 296,326.24 | 231,851.96 |
| | கடன்பட்டோர் | 910,000.00 | 910,000.00 |
| | வங்கி மீதி | 10,779,640.46 | 14,528,246.81 |
| 17. | அசையாத சொத்துக்கள் | 765,396,770.00 | 765,397,567.00 |
| | ஒன்றிணைந்த நிவாரணத் உதவித்திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற முதலீடு | 764,544,380.00 | 764,544,380.00 |
| | கணக்காய்வு செலவுக்கான ஒதுக்கம் | 852,390.00 | 853,187.00 |
| 18. | நடமாடும் பொறுப்புக்கள் | 8,376,739.03 | 9,816,939.07 |
| | திரண்ட செலவினம் | 300,409.33 | 747,939.07 |
| | வைப்புக் கணக்கு | 8,076,329.70 | 9,069,000.00 |

# அசையாத சொத்துக்கள் -2011

| | மோட்டார் வாகனம் | தளபாடம் அலுவலக உபகரணங்களை பொருத்துதல் | இயந்திரம் | தொலை பேசி | அறைகளாகப் பிரித்தல் | கணனிகள் | குளிரூட்டிகள் | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2011.01.01ல் திகதியின் மீதி | 6,668,570.00 | 5,984,199.41 | 1,475,328.50 | 813,564.84 | 1,522,660.00 | 1,550,322.60 | 2,375,793.83 | 20,390,439.18 |
| வருடத்தினுள் கூட்டப்பட்டவை | 6,183,000.00 | 146,074.50 | 84,896.00 | 29,916.67 | - | 663,620.00 | - | 7,107,507.17 |
| வருடத்தினுள் விற்பனை செய்யப்பட்டவை | 2,100,000.00 | 34,693.50 | - | - | - | 173,700.00 | - | 2,308,393.50 |
| 2011.12.31 திகதியின் மீதி | 10,751,570.00 | 6,095,580.41 | 1,560,224.50 | 843,481.51 | 1,522,660.00 | 2,040,242.60 | 2,375,793.83 | 25,189,552.85 |
| பெறுமானத் தேய்வு 2011.01.01திகதியின் மீதி | 6,627,268.66 | 4,207,612.60 | 886,038.65 | 666,687.32 | 792,306.62 | 1,095,122.44 | 2,375,793.83 | 16,650,830.12 |
| மீள்மதிப்பிட்டு சொத்துக்கான பெறுமானத்தேய்வு | - | - | - | - | - | - | - | - |
| விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கான பெறுமான்தேய்வு. | 2,100,000.00 | 15,785.40 | - | - | - | 171,612.50 | - | 2,287,397.90 |
| வருடததிற்கான ஒதுக்கம் | 32,047.43 | 317,468.14 | 175,262.43 | 42,670.40 | 152,266.00 | 258,408.50 | - | 978,122.90 |
| வருடத்தினுள் மாற்றப்பட்டவை | - | - | - | - | - | - | - | - |
| 2011.12.31 காசு மீதி | 4,559,316.00 | 4,509,295.34 | 1,061,301.08 | 709,357.72 | 944,572.62 | 1,181,918.44 | 2,375,793.83 | 15,341,555.12 |
| 2011.12.31 திகதிக்கு தேறிய மதிப்பீடு | 6,192,253.91 | 1,586,285.07 | 498,923.42 | 134,123.79 | 578,087.38 | 858,324.16 | - | 9,847,997.73 |

## 2011.12.31 திகதியில் ஒன்றிணைந்த நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முதலீடு

| நிறுவனம் | பேரேட்டுப் பக்கம் | வீட்டுக் கடன் | வர்த்தகக் கடன் | கைத்தொழில் கடன் | சுயதொழில் கடன் | புதிய வீடமைப்புக் கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 39, 51 | 44,500,000.00 | 2,500,000.00 | 21,000,000.00 | 324,500,000.00 | 57,000,000.00 | 449,500,000.00 |
| மக்கள் வங்கி | 41 | 258,700,000.00 | - | - | - | - | 258,700,000.00 |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 49 | 126,352,000.00 | - | - | - | - | 126,352,000.00 |
| ஹட்டன் நெ'னல் வங்கி | 43 | 3,751,945.57 | 1,248,054.43 | - | - | - | 5,000,000.00 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 47 | 28,210,212.63 | - | - | - | - | 28,210,212.63 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 45 | 10,000,000.00 | - | - | - | - | 10,000,000.00 |
| **மொத்தம்** | | **471,514,158.20** | **3,748,054.43** | **21,000,000.00** | **324,500,000.00** | **57,000,000.00** | **877,762,212.63** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. JP/A/REPPIA/FA/2011 — ඔබේ අංකය / உமது இல / No. — දිනය / திகதி / Date 30 April 2013

தலைவர்,
ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபை

**ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபையின் (ஆர்ஈபீஜஏ) 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபையின் (ஆர்ஈபீஜஏ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மாற்றக்கூற்று மற்றும் காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1987 இன் 29 ஆம் இலக்க ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 8(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை 2013 சனவரி 08 ஆம் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
දුරකථනය / தொலைபேசி 2887220
ෆැක්ස් අංකය / பெக்ஸ் இல 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் oaggov@sltnet.lk

கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும்

பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை , கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆட்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களின் புனரமைப்பு அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டு நியமம்**

இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் குறித்த பெறுமானத்தேய்வில் முறையாக பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கைக்கெட்டும் பெறுமதி பூச்சியமான சொத்துக்கள் நிறுவகத்தின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதாயின், அச் சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு மீள கைக்கெட்டும் பெறுமதியுடன் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கைக்கெட்டும் பெறுமதி பூச்சியமான ரூபா 4,406,987 தொகையான சொத்துக்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றை மீள் பெறுமதியிடப்படுவதற்கான நடவடிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1983 யூலை கலவரம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,000 படியான சுயதொழில் கடன் மீதியும் ரூபா 25,000 படியான ஆதனங்கள் மீளமைப்புக் கடன் தொகை மீதிகளின் மீளாய்வாண்டின் இறுதியிலான கூட்டுத்தொகை முறையே ரூபா 9,289,485 ஆகவும் ரூபா 67,341,610 ஆகவும் 2013 பெப்ரவரி 07 ஆம் திகதியளவிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரத்தில் கடனைப் பதிவளிப்பதற்காக உரிய விண்ணப்பங்கள் அரச நிதித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கடனைப் பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் இதுவரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் 2013 பெப்ரவரி மாதத்தின் போது அதிகாரசபையின் தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) புனரமைப்பு அதிகாரசபையால் வீடமைப்பு, வியாபார, கைத்தொழிலுக்காகக் கடன் வழங்கப்படுவதற்காக மூன்று வட்டி வீதங்களில் இலங்கை வங்கியில் செயற்படுத்தப்பட்டிருந்த முதலீட்டிற்காக வெவ்வேறாக கணக்குகள் பேணப்பட வேண்டிய போதிலும் வட்டி வீதம் நூற்றுக்கு 1.5 முதல் நூற்றுக்கு 2.5 இற்காக பேரேட்டில் ஒரு கணக்கு மாத்திரம் பேணப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒவ்வொரு முதலீட்டிற்கும் உரிய குறித்த வட்டி விகிதத்தின் கீழ் வட்டி வருமானம் சரியாக பெறப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து வாடகை அடிப்படையில் ஒரு வாகனம் பெற்றுக்கொள்ளப்பட்டு இதற்காக ரூபா 10,000 தொகையான வைப்பொன்று 2006 ஆம் ஆண்டின் போது அந் நிறுவகத்திற்கு

வழங்கப்பட்டிருந்த போதிலும் இதனை இதுவரையிலும் அறவிடப்படுவதற்காக அதிகாரசபை தவறியிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது விபத்திற்குள்ளான ஒரு வாகனத்திற்கு வழங்கப்பட வேண்டிய காப்புறுதி நட்டஈட்டுத்தொகையான ரூபா 44,300 தொகையை அறவிடுவதற்காக அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1990 ஆம் ஆண்டு முதல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முதலீட்டிலிருந்து பெறவேண்டிய ரூபா 32,640,000 தொகையான வட்டித்தொகையை அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2003 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 73,920,691 தொகையான திறைசேரி வைப்புக்களுக்காக எழுத்து மூலச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) தாபனவிதிக் கோவை | |
| VII ஆம் அத்தியாயம் 12.2.3 ஆம் பிரிவு மற்றுமு் ii ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் | பல வருட காலமாக தொடர்ந்து பதில் கடமை அடிப்படையில் பதவிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக முன்னைய |

| | |
|---|---|
| பிரிவு | ஆண்டின் போது ரூபா 538,410 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 127,575 தொகை பதில் கடமைச் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

(எ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| (i) நி.பி. 371(2) | பெற்றுக்கொள்ளப்பட்ட துணைக்கட்டுநிதிகள் வழங்கப்பட்ட செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 10 சந்தர்ப்பங்களின் போது மொத்த கூட்டுத்தொகை ரூபா 287,400 ஆன முற்பணங்கள் 20 நாட்களுக்கும் 30 நாட்களுக்கு இடைப்பட்ட காலதாமதத்தை அடுத்து தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) நி.பி. 502(2) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 23,149,309 தொகையான சொத்துக்கள், நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) திறைசேரிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,040,243 தொகையான கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2011 திசெம்பர் 31 இல் அதிகாரசபையின் தொழிற்பாடுகளில் ரூபா 4,217,335 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,137,985 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,079,350 தொகையான அதிகரிப்பிற்காக விபத்திற்குள்ளானோருக்கான நட்டஈடு, பாதிப்பிற்குள்ளான ஆதனங்களுக்கான இழப்பீடு மற்றும் ஏனைய நலன்புரி நடவடிக்கைகளுக்கான செலவினம் குறைவடைந்தமை மற்றும் சொத்துக்கள் அகற்றப்படுவதனால் கிடைக்கப்பெற்ற இலாபம் போன்ற விடயங்கள் குறிப்பாகத் தாக்கமளித்திருந்தன.

3.2 செயற்பாட்டு மீளாய்வு

3.2.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

1989 ஆம் ஆண்டு முதல் பிரதிப் பணிப்பாளர் (நிதி) பதவி வெற்றிட நிலையில் காணப்பட்ட போதிலும் இதற்காக உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நல்ஆளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையில் நூற்றுக்கு 19.4 சதவீதத்திற்கும் நூற்றுக்கு 85.8 வரையான வீச்சில் முரண்கள் நிலவியமையால் ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பாதீட்டுக் கட்டுப்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ஆர்ஈபி/எப்/1/21 2013.02.07

**கணக்காய்வாளர்,**
கணக்காய்வாளர் திணைக்களம்.

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சி) பிரிவின் பிரகாரம் 2011ம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் (புனர்வாழ்வு அதிகாரசபை) கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தங்களால் எனக்கு அனுப்பப்பட்ட 2012.01.31 ஆந் திகதிய ஜேபீ/ஏ/ஆர்ஈபிஜஏ/எப்ஏ/2011 இலக்கத்தைக் கொண்ட அறிக்கை சம்பந்தமான எனது கணிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

(அ) (ஆ) இந்நிதியினை மீளப் பெறுவதற்காக மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், முயற்சி பயனளிக்காதுவிடின் எதிர்காலத்தில் கடனாக ஒதுக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

(இ) 1983ம் ஆண்டு ஜுலை கலவரத்தின் காரணமாக பாதிப்படைந்த மக்களுக்காக வழங்கப்பட்டிருந்த சுயதொழில் கடனினை மீளப் பெறுவதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும், பல்வேறு காரணங்கள் காரணமாக பயனளிக்கவில்லை. அதனால் உரிய கடனினை நீக்குவதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன் நிதிச் சட்டங்களுக்கமைவாக உரிய கடனை நீக்குவதற்காக அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அதன்பிரகாரம் கடனை நீக்குவதற்குரிய விண்ணப்பப்படிவம் அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, அரச நிதித் திணைக்களத்தினால் இக்கடனினை நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஈ) 1983ம் ஆண்டு ஜுலை கலவரத்தின் காரணமாக அழிவடைந்த வியாபாரத் தலத்தினை மீளக் கட்டியெழுப்புவற்காக ரூபா 200,000.00 ஆக கடன் திட்டமொன்று இலங்கை வங்கியின் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு, அதற்குரிய வட்டி மற்றும் தவணைப்பணம் இதுவரை இலங்கை வங்கியின் மூலம் உரிய நபர்களிடமிருந்து மீளப் பெற்று எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் உரிய கடனினை மீளப் பெறும் பொறுப்பு இலங்கை வங்கியிடம் உள்ளதால் இக்கடனினை வழங்கிய தினத்திலிருந்து இதுவரை வட்டியினை

கணக்கீடுதல் அதிகாரசபையினால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதால் அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(உ) கடன் திட்டங்களுக்காக 2.5% மற்றும் 1.5% ஆக வட்டி வீதமுள்ள முதலீடுகளுக்காக 2013ம் ஆண்டிலிருந்து வெவ்வேறாக கணக்கு மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

(ஊ) ஒவ்வொரு நிதி நிறுவனங்களினதும் முதலீடுகளுக்காக உரிய முதலீடு செய்யப்பட்டுள்ள தினங்களை கருத்திற்கொண்டு மிகச்சரியாக வட்டியினை கணக்கீட்டுள்ளதோடு, அவை உப அட்டவணைகளில் நிதிக் கூற்றுக்களிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இம் உப அட்டவணைகள் தொடர்பாக ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமிடத்து அது தொடர்பாக தங்களின் அறிவூறுத்தலை எதிர்பார்க்கின்றோம்.

(எ) 2012 இறுதிக் கணக்கிற்காக குறிப்பு இல.02 இன் மூலம் சரி செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2.2.2 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை**

புனர்வாழ்வு அதிகாரசபையினால் நிலையான சொத்துக்களின் பதிவுகள் மேற்கொள்ளப்படாது இருந்தமையினால் இதுவரை உரிய நிலையான சொத்துக்களுக்கான அட்டவணையை ஆரம்பத்திலிருந்து தயார் படுத்துவதற்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தியுள்ளது. அதன்பிரகாரம் எதிர்காலத்தில் இந்நிலையினை சரி செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**2.2.3 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

**(அ) இலங்கை கணக்கியல் இல.18**

2013 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்குரிய நிலையான சொத்துக்களை மீளக் கணக்கீடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதால், அதன்பிரகாரம் சொத்துக்களின் உண்மைப் பெறுமதியினை சரி செய்ய முடியும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

(ஆ) தாபனக் கோவை

(ஶ) vii ஆவது சரத்தின்படி

12.2.3 பிரிவின் பிரகாரம்

ii ஆவது சரத்தின்படி 13.3

அதிகாரசபைக்காக சிபார்சு செய்யப்பட்டுள்ள அலுவலர் சபையினை மீள ஒருங்கிணைத்ததோடு, சில பதவிகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அதன்பிரகாரம் புதிய ஆட்சேர்ப்புக்காக பட்டியல் ஒன்று தயார் படுத்தி அனுமதி கோரியுள்ளது. இக்காலத்திற்குள் அதிகாரசபையின் சேவைக்காக பதவிகள் சில பதிற்கடமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இதுவரை அந்நிலைமையானது உரிய முறைப்படி சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

**(இ) இலங்கை அரசின் நிதிச் சட்டம்**

**இல 371 (2)**

கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் இடைக்கால அறவீடுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கியதுடன், இதுவரை அதன்பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

### 3. நிதி மற்றும் செயலாற்றல் அறிக்கை

#### 3.1.2 வரவு செலவு மற்றும்

வரவு செலவு அறிக்கையில் வினைத்திறன் முகாமைத்துவ ஆற்றலுள்ளவர்களாக மாற்றுவதற்கு ஆகக்கூடிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், விசேட சந்தர்ப்பங்கள் மற்றும் கடமைகள் காரணமாக வெளிச் செல்ல நேரிட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

#### 3.2 செயலாற்றல் அறிக்கை

**வினைத்திறனற்ற முகாமைத்துவம்**

(i) பிரதிப்பணிப்பாளர் (நிதி) பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் சேர்ப்பதற்காக பத்திரிகை விளம்பரமொன்று கோரப்பட்டுள்ளதுடன், நேர்முகப் பரீட்சை சபையொன்றும் நியமிக்கப்ட்டுள்து. அதன்பிரகாரம் அண்மையில் இப்பதவிற்கான வெற்றிடம் நிரப்பப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

(ii) இதுவரை நிலையான சொத்துக்களின் புத்தகம் தயார்படுத்துவதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், கூடிய விரைவில் இந்நடவடிக்கை முடிவடையும் என்பதை அறியத் தருகின்றேன்.

(iii) தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அறவிடு செய்யவுள்ள முதலீடுகளின் வட்டித் தொகை மீளப் பெறுவது தொடர்பாக அந்நிறுவனத்துடன் தற்போதும் கலந்துரையாடல்கள் பல இடம்பெற்றுள்ளது. அதன்பிரகாரம் உரிய முதலீடுகள்களின் சிறுதொகையாக அறவிடப்படுவதுடன் மிகுதியாகவுள்ள முதலீடு மற்றும் வட்டி தொடர்பாக எடுக்கக்கூடிய கொள்கைகளுடனான தீர்மானம் தொடர்பாக நிறுவனங்கள் இரண்டினதும் நிர்வாக சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் இந்நிதி வேறு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் முதலீடுவதற்காக அல்லது மீளப்பெறுவதற்காக இங்கு தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
புனர்வாழ்வு அதிகாரசபை.